முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.*

வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

பாதுகாப்பு

***668—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாய நிலங்களைப் பாதுகாத்திட பார்த்தீனியம் செடியை அழிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பார்த்தீனியம் செடியை அழிப்பதற்கு எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை. இந்தச் செடியினை அழிப்பதற்கு உப்புக் கரைசல் தண்ணீரைத் தெளித்து அதன் மூலமாக அது அழிக்கப்படும் என்பதை வேளாண் இணை இயக்குநர் மூலமாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க, அனைவராலும் போற்றத் தகுந்த, ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து, தமிழ்நாட்டில் மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள, நாங்கள் நித்தம் நித்தம் வணங்கும் தமிழகத்தின் காவல் தெய்வம், கழக நிரந்தரப் பொதுச்*

2011 ஆகஸ்ட் 10]

செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி எனது கேள்விக் கணையைத் தொடங்குகின்றேன். இந்தக் கேள்வி கேட்கப்பட்டதன் நோக்கம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதிநிலை அறிக்கையில் முற்போக்கான சிந்தனை, எந்த அரசும் கொண்டுவராத திட்டம், பசுமைப் புரட்சித் திட்டம். இந்த 5 ஆண்டுகளில் இந்தத் திட்டத்தை முடித்துவிடுகிறேன் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லவில்லை. 2025 ஆம் ஆண்டு வரை இந்தத் திட்டத்தை நீட்டித்து அந்தப் பசுமைப் புரட்சித் திட்டத்திற்கு வேண்டிய ஆதாரமான மின் உற்பத்தியைச் செய்து, நீர் வளத்தைக் கொடுத்து, சொட்டு நீர்ப் பாசனக் கருவிகளை வழங்கி, சிறப்புச் செய்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பார்த்தீனியம் செடி விவசாய நிலத்தை எப்படிப் பாதிக்கிறதென்றால், முதலில் அந்தச் செடியினுடைய தன்மையைப்பற்றி நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு செடி முளைத்து அது விதை விடுகின்றபொழுது, குறைந்தது 100 விதை முதல் 10,000 விதை வரை உற்பத்தி செய்யக்கூடிய தன்மை கொண்டது, அது நிலத்தின் தன்மையைப் பொறுத்தது. அந்தச் செடி விரைவாக வளர்ந்து பயிர்களை நாசம் செய்கிறது. இது தமிழ்நாடு முழுவதும் இருக்கிற செய்தி. இரண்டாவது, இந்த விதை கெடாமல் 2 வருடம் நிலத்திலேயே தங்கியிருக்கிறது. எந்தக் காலத்திலும் இந்த விதை முளைக்கலாம். இப்படிப்பட்ட அபாயகரமான செடி இந்தப் பார்த்தீனியம் செடி. இந்தச் செடியினால் என்னென்ன கொடுமைகள் ஏற்படுகிறதென்றால், மனிதர்களுக்கு அலர்ஜி ஏற்படுகிறது. கையில், காலில் பட்டால் அரிப்பு ஏற்படுகிறது. கால்நடைகள் புல்லைத் தின்கின்றபொழுது பார்த்தீனியம் செடியையும் சேர்த்து தின்கின்றபொழுது, கால்நடைகளுக்குக் காய்ச்சல் வருகிறது. நிலமும் பாதிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட கொடிய செடியை— மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 2 லிட்டர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்விக்கு வாருங்கள் திரு. தங்க. தமிழ்ச்செல்வன்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *கேள்வியைத்தான் கேட்கிறேன், முடித்துவிடுகிறேன். முக்கியமான கேள்வி என்பதால் சொல்கிறேன், பேரவைத் தலைவர் அவர்களே. ஒரு லிட்டர் தண்ணீரில் 200 கிராம் கல் உப்புக் கரைசலோடு, இரண்டு மில்லி லிட்டர் சோப்பு ஆயிலைக் கலந்து செடி முழுவதும் நனையுமாறு தெளித்தால், பார்த்தீனியம் செடி பட்டுப்போகும். நான் வரவேற்கிறேன். இதை ஒவ்வொரு விவசாயியும் செய்ய முடியாது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ணுக்குத் தெரியாத காட்டுக்குள் ஒளிந்திருந்த சந்தனக் கடத்தல் வீரப்பனைச் சுட்டு வீழ்த்தி வரலாற்றுச் சாதனை படைத்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் செடியை அழிப்பதற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கல்லூரிகளில் இருக்கின்ற மாணவ, மாணவிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள், 100 நாட்கள் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள் மற்றும் விவசாயிகள் அமைப்புகளின்* network*–ஐ மொத்தமாக வைத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புரட்சி செய்தால் இந்த விஷச் செடியை அழிக்க முடியும் என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் சொன்ன யோசனை நல்ல யோசனை. அரசு இதை மேற்கொண்டு, இந்தப் பார்த்தீனியம் செடி ஒழிப்பை ஓர் இயக்கமாகவே எடுத்துக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முழுவதும் உள்ள நிலங்களில் பார்த்தீனியம் செடியை ஒழிப்பதற்கு தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

2011 ஆகஸ்ட் 10]

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் கேள்விக்கு விடை அளிக்கின்றபோது, விஷச் செடியான பார்த்தீனியம் செடியை தமிழகம் முழுவதும் ஓர் இயக்கமாகவே நடத்தி முழுமையாக ஒழிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். உண்மையிலேயே பாராட்ட வேண்டும், நன்றி செலுத்த வேண்டும். விவசாய விளைநிலங்களில் முழுமையாக இந்தச் செடி முளைக்கின்றது. அமெரிக்காவிலிருந்து PL 480 ஏற்றுமதி செய்த கோதுமையிலிருந்து இந்தியாவிற்குள் கொண்டுவரப்பட்ட ஒரு விஷச் செடிதான் இது. இது நம்முடைய விளை நிலங்கள் முழுவதையும் கடுமையாகப் பாதித்துக் கொண்டிருக்கின்றது. எனவே, இச்செடியை அழிப்பதற்காக எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய முயற்சிகள் சரியானவை. இதனால், மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய தோல் வியாதியைக் கட்டுப்படுத்தக்கூடிய முறையிலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் இணையற்ற முதலமைச்சராக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதற்குப் பிறகு, இந்தத் துறை அதை விரைவாகச் செயல்படுத்தும் என்பதை உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க.தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, பாதம் பணிந்து, எனது நன்றியைக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நச்சுத் தன்மை உள்ள பார்த்தீனியம் செடி எங்கிருந்து, எப்பொழுது நம்முடைய நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது? பார்த்தீனியம் செடிகளால் வேளாண்மைக்கும், தாவரங்களுக்கும், மனிதர்களுக்கும் என்னென்ன தீமைகள் ஏற்படுகின்றன? இதை அழிப்பதற்கு அறிவியல்பூர்வமான அறிக்கை ஏதேனும் அரசின் வசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலமாக இதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதைப் பொறுத்தவரையிலும் பல்வேறு மாநிலங்களில் பரவி, தமிழ்நாட்டிலும் பரவியிருக்கிறது. பார்த்தீனியம் செடி என்பது காற்றின்மூலம் விதைகள் பரவி விழுந்து, அதன்மூலமாக ஆயிரக்கணக்கான செடிகள் உற்பத்தி ஆகின்றன. விவசாயிகளுக்கு வேலையாட்கள் கிடைக்காத காரணத்தின் அடிப்படையில், வேளாண்மை செய்கின்றபோது, அவற்றை அப்புறப்படுத்துவதற்கு முடியாத சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதைப்போல, 100 நாட்கள் வேலை செய்கின்றவர்களைப் பயன்படுத்தி, சாலையோரங்களிலும், விவசாய நிலங்களிலும் இருக்கின்ற பார்த்தீனியம் செடிகளை அப்புறப்படுத்துவதன் மூலமாக, வேளாண்மை செய்யப்படுகிற விவசாய நிலங்களுக்கு அது பரவாமல் பார்த்துக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

மின் உற்பத்தி

***735—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—